# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2074/13 - 2018 ජුනි මස 05 වැනි අඟහරුවාදා - 2018.06.05

*2074/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டம்***

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இராஜதந்திர சிறப்புரிமைகள், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் தொடர்பில் அதாவது கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என்பனவற்றிற்கு இடையே செய்துகொள்ளப்பட்ட கீழே தொடர்புடைய உறுப்புரைகள் விபரிக்கப்பட்டுள்ளதுமான உடன்படிக்கையின் உறுப்புரைகளுக்கு விளைவாந்தன்மையை ஏற்படுத்தத்தக்க அளவில் பிரயோகிக்கப்படுத்துதல் வேண்டும் என பிரகடனம் செய்கிறேன்.*

திலக் மாரப்பன (பா. உ.),
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூன் 04.*

**அட்டவணை**

*அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் VII, VIII, IX, X, XI, XII, XIII ஆம் உறுப்புரைகள் :*

உறுப்புரை VII

***தனிச் சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகள் :***

1. *அரசாங்கம் பொது உடன்படிக்கையுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அதனுடைய உடைமை, நிதி வளங்கள் மற்றும் சொத்துக்கள், அதனுடைய தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ அலுவலகங்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்கின்றது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின்*


1A - PG 4064 — 507 (2018/06)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மனிதநேய உதவிகளின் செயற்பாடுகளுக்காக மற்றும் பரஸ்பரமாக தீர்மானிக்கப்பட்ட சர்வதேச பாதுகாப்பின் திறமையான பயிற்சிக்காகத் தேவைப்படும் மேலதிக சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகள் என்பனவற்றை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் மற்றும் அதனுடைய ஆளணிகளுக்கு வழங்க அரசாங்கமும் இணக்கம் கொள்கின்றது.

2. உறுப்புரையின் 1 ஆம் பந்திக்கு தப்பபிப்பிராயம் ஏற்படாதவாறு ஒப்பந்தத்தின் உறுப்புரை VIII இல் இருந்து X வரை வழங்கப்பட்டவாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் மற்றும் அதனுடைய ஆளணி அமைப்புக்கான சலுகைகள், சிறப்புரிமைகள், உரிமைகள், வசதிகள் என்பனவற்றை முக்கியமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளருக்கு அரசாங்கம் வழங்குகின்றது.

உறுப்புரை VIII

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம், உடமை, நிதி வளங்கள் மற்றும் சொத்துக்கள் :**

1. ஏதாவது ஒரு முக்கிய வழக்கில் தெளிவாக அதனுடைய சிறப்புரிமைப் பாதுகாப்பை விட்டுக்கொடுத்து தவிர்த்திருந்தால் அது எந்த ஒரு நடவடிக்கைகளையும் நிறைவேற்றப்பட மாட்டாது என்று அறிந்துகொள்ளப்படும் என்பதனைத் தவிர அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் உடைமை, நிதிகள் மற்றும் சொத்துக்கள் எந்த இடத்தில் அமைந்திருந்தாலும் அல்லது எவரேனும் அதன் உடமையை தன்னகத்தே வைத்திருந்தாலும் அவை சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு விலக்களிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.

2. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் எந்தவித தாக்கத்திற்கும் உட்படாதவாறு பாதுகாப்பாக அமைந்துள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் உடைமை, நிதிகள் மற்றும் சொத்துக்கள் எந்த இடத்தில் அமைந்திருந்தாலும் அல்லது எவரேனும் அதன் உடமையை தன்னகத்தே வைத்திருந்தாலும் அது தேடுதல், சொத்துக்களுக்கு உரிமை கோரல், அபகரித்தல், உடைமையை அபகரித்தல் அல்லது எந்த ஒரு வகையிலான தீர்மானத்தின் அடிப்படையில் நிறைவேற்று நிருவாக, நீதித்துறை அல்லது சட்டம் அமைக்கும் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படாத பாதுகாப்பு சிறப்புரிமை பெற்றுள்ளது.

3. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆவணங்கள் வைத்து காப்பாற்றப்படும் இடங்கள், ஆவண காப்பகம் மற்றும் பொதுவாக அதற்குச் சொந்தமான அவற்றிலுள்ள சகல ஆவணங்களும் எதுவித தாக்குதலுக்கும் இலக்காகாமல் பாதுகாப்பாகப் பேணப்படுகின்றது.

4. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் நிதி வளங்கள், சொத்துக்கள், வருமானம் மற்றும் ஏனைய சொத்துக்கள் பின்வருவனவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது :

(a) எந்த ஒரு வகையிலான நேரடி வரி, இது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்கான வரிகளுக்கு விலக்களித்தலைக் கோர முடியாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலாகும் ;

(b) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினரால் அதனது அலுவலக பாவனைக்காக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான சுங்கத் தீர்வுக் கட்டணங்கள் மற்றும் தடைகள், கட்டுப்பாடுகள், அப்படியாக விலக்களிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அரசாங்கத்துடன் இணக்கப்பாடு கொண்ட நிபந்தனைகளைத் தவிர்ந்த மேற்கூறிய பொருட்களை இந்நாட்டில் விற்க முடியாது என்ற நிபந்தனைக்கு உட்படுத்தப்படும் ;

(c) அதனுடைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வெளியீடுகள் தொடர்பான சுங்க வரிகள் மற்றும் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.

5. கீழே உறுப்புக்கூறு XI இல் விளக்கமாகக் கூறப்பட்டவாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினர்கள் மற்றும் சர்வதேச உத்தியோகத்தர்களுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகள் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் திகதி PR/PO1/01 என்ற இலக்கம் கொண்ட வாய்மூல இராஜதந்திர ஆவணத்தில் வழங்கப்பட்டவாறு பெறுமதிசேர் வரி (வெட்) இலிருந்தும் (VAT) மற்றும் இராஜதந்திர தூதுக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட ஏனைய தீர்வுகள், வரிகள் ஆகியவற்றிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

6. அகதிகளுக்கான மனிதநேய உதவிகளுடன் தொடர்புடையனவற்றுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் சார்பாக செயற்பட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரால் முழுமையாக அங்கீகாரம் செய்யப்பட்ட சர்வதேச அமுலாக்கங்கள் பங்காளிகளால் அல்லது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரினால் நாட்டில் இறக்குமதி, ஏற்றுமதி அல்லது கொள்வனவு செய்யப்பட்ட எந்த ஒரு மூலப்பொருட்கள், இது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் வழங்குநர்கள் மற்றும் பெறுபவர்கள் என்ற நிலையிலிருந்து சுங்க வரிகள், தடைகள், கட்டுப்பாடுகள் அதுபோல நேரடி அல்லது நேரடியற்ற வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன் அமைந்துள்ளது.

7. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரால் எந்த ஒரு நிதி கட்டுப்பாடுகள், சட்ட ஒழுங்கமைப்புகள் அல்லது தற்காலிக நிறுத்தம் ஆகியன போன்ற நிபந்தனைக்கு உட்படுத்தப்படலாகாது என்பதுடன் அவை சுதந்திரமாக, கட்டுப்பாடற்ற நிலையில் இருக்கும் :

(a) அதிகாரபூர்வ வர்த்தக முகவர்களிடமிருந்து பெறுதல், மாற்றக்கூடிய நாணயங்கள் என்பனவற்றை ஸ்தாபித்து பயன்படுத்துதல், வெளிநாட்டு நாணய கணக்குகளைப் பேணுதல் மற்றும் அதிகாரபூர்வ நிறுவனங்கள் மூலம் நிதிகள், பிணைகள், தங்கம் என்பனவற்றைப் பெற்று பயன்படுத்துதல் ;

(b) விருந்தோம்பும் நாட்டுக்குள் எந்த ஒரு நாட்டிலும் இருந்து நிதிகள், பணயங்கள், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் தங்கம் என்பனவற்றைக் கொண்டுவந்து அவற்றை விருந்தோம்பும் நாட்டிற்குள் பயன்படுத்தி அல்லது ஏனைய நாடுகளுக்கு இடமாற்றம் செய்தல்.

8. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் நிலையம் நாணய மாற்றத்திற்கு மிகச் சிறந்த சாதகமான, சட்டப்படியான விலைமதிப்பீட்டை அனுபவிக்கும்.

உறுப்புரை IX

**தொடர்பாடல் வசதிகள் :**

1. இராஜதந்திர தூதுக்குழுக்கள் அடங்கலாகவோ அல்லது ஏனைய அரசாங்கத்திற்கு இடையே சர்வதேச நிறுவகங்களுக்கு அஞ்சல் தொடர்பில் கட்டணங்கள் மற்றும் சுங்க வரிகள், முக்கியத்துவங்கள், கடல்வழி தந்திச் செய்திகள், தூரதரிசினி மூலம் பெறப்படும் புகைப்படங்கள், தொலைபேசி, தந்திமுறை, டெலெக்ஸ் மற்றும் ஏனைய தொடர்பாடல்கள் அதுபோல வானொலி மற்றும் செய்தி இதழ்களுக்கான தகவல்களின் விலைமதிப்பீட்டல்கள் அடங்கலாக அரசாங்கத்தினால் ஏனைய அரசாங்கத்திற்கு வழங்கப்படும் சலுகைகளைவிடக் குறைவாக இல்லாது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருக்கும் அதனுடைய உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள், பணிகள் என்பன தொடர்பாக அனுபவிக்க வாய்ப்பாக உள்ளது.

2. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் கடிதத் தொடர்புகள், உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள் என்பன தாக்குதல்களுக்கு இலக்காகாத பாதுகாப்புத் தன்மையை அரசாங்கம் உறுதி செய்யும் மற்றும் அதனுடைய கடிதத் தொடர்புகள் மற்றும் தொடர்பாடல்களுக்கு எதுவித தணிக்கைகளையும் மேற்கொள்ளாது. அவ்வித வரையறை அற்ற பாதுகாப்புத் தன்மை இந்த கணக்கிடப்படாத காரணத்தினால் வெளியீடுகள், புகைப்படங்கள், படங்கள் மற்றும் ஓசைப்பதிவுகள்.

3. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருக்கு அதனுடைய இரகசிய குறியீடுகளை உபயோகித்து அதனுடைய கடிதத் தொடர்புகள் மற்றும் ஏனைய பொருட்களை அஞ்சல் தூதுவர் மூலம் அல்லது உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட பைகளில் தனிச்சலுகை சிறப்புரிமைகள் ஏனைய இராஜதந்திர அஞ்சல் தூதுவர் மற்றும் பைகள் போன்ற அதே சலுகைகளைப் பெற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருக்கு உரிமை உண்டு.

4. தற்போது அமுலில் உள்ள விதிமுறை மற்றும் உரிய சர்வதேச தொடர்பாடல் இணைப்புச் சங்கம் என்பனவற்றின்கீழ் தேசிய அதிகார சபையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அல்லது வலயத் தளத்தில் குறித்தொடுக்கப்பட்ட அடுத்தடுத்துவரும் அலை வரிசைகளை பாவித்து வானொலி மற்றும் ஏனைய தொடர்பாடல் கருவிகள், செய்மதித் தொடர்பாடல் அமைப்புகள் அடங்கலாக திறமையாகச் செயற்பட அரசாங்கம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருக்கு விளைபயனுடன் செயற்படுத்துவதற்கு அதிகாரம் வழங்குகின்றது.

உறுப்புரை X

***அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகப் பணியாளர்கள் :***

1. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளரின் பிரதிநிதி நாட்டில் வசிக்கும்போது ஏனைய இராஜதந்திர தூதுவர்களுக்கு வழமையாக வழங்கப்படும் முன்னுரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள், விலக்களிப்புகள் என்பனவற்றை அவர், அவரின் மனைவி மற்றும் அவரில் தங்கியுள்ளவர்கள் அனுபவிப்பார்கள். இந்த நோக்கத்திற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இராஜதந்திர பட்டியலில் அதனுடைய பெயரை உள்ளடக்குகின்றது.

2. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் நாட்டில் வாழும்போது பின்வரும் வசதிகள், சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகளை அனுபவிப்பார்கள் :

(a) தனிப்பட்ட கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் என்பனவற்றிற்கு உட்படுத்தப்படாத சிறப்புரிமை ;

(b) வாய்மூல அல்லது எழுத்துமூல வார்த்தைகள் மற்றும் அவர்களது உத்தியோகபூர்வ பதவியில் ஆற்றப்பட்ட எல்லாவித நடவடிக்கைகள் தொடர்பான சட்டபூர்வ நடைமுறைகள் என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டு சிறப்புரிமை பெறுவார்கள். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருடன் தொழில் இடைநிறுத்தப்பட்டிருந்த பின்பும் அத்தகைய சிறப்புரிமை தொடரும் ;

(c) அவர்களுடைய உத்தியோகபூர்வ பொதிகளை நிறுத்தி கைப்பற்றுதல் மற்றும் பொதிகளைச் சோதனையிடுதல் என்பனவற்றிலிருந்து விலக்களிப்புச் செய்தல் ;

(d) எந்த ஒரு இராணுவ சேவைக் கடப்பாடுகள் அல்லது ஏதாவது சேவை கடப்பாட்டிற்கு உட்படாத சிறப்புரிமை ;

(e) அயல் நாட்டார் பதிவு குடிவரவுக் கட்டுப்பாடு என்பனவற்றிலிருந்து அவர்கள் அவர்களுடைய மனைவி, அவர்களில் தங்கியுள்ள அவர்களது உறவினர்கள் மற்றும் அவர்களது இல்லங்களில் வாழும் ஏனைய அங்கத்தவர்கள் தொடர்பில் விலக்களிப்பு ;

(f) ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் என்பனவற்றால் வழங்கப்படும் வேதனம் மற்றும் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான வரிகளில் விலக்களிப்பு ;

(g) உடனடியாக அங்கீகாரம் மற்றும் செலவு அற்ற அயல்நாட்டு நுழைவுரிமைச் சீட்டு (விசா) என்பனவற்றை வழங்குதல், தேவைப்பட்டால் அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிச்சீட்டு என்பனவற்றை வழங்குதல், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் சர்வதேச பாதுகாப்பு மற்றும் மனிதநேய உதவித் தொழில் திட்டங்களைச் செயற்படுத்த நாட்டினுள் சுதந்திரமாக தேவையான இடம் வரைக்கும் நடமாடுதல் ;

(h) இலங்கையில் உள்ள (UNDP) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப்பிரிவின் ஒப்பிடக்கூடிய வரிசையின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் நாணய மாற்று போன்ற வசதிகளை வழங்குதல் ;

(i) அதேபோன்ற பாதுகாப்பு மற்றும் சொந்த நாட்டிற்கு திரும்பச் செல்வதற்கான வசதிகளை அவர்களுக்கு அவர்கள் மனைவிகள் மற்றும் அவர்களில் தங்கி உள்ளவர்கள் உறவினர்கள் மற்றும் அவர்கள் இல்லத்தில் உள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கு சர்வதேச நெருக்கடி நிலையில் இராஜதந்திர தூதுவர்களுக்கு வழங்குவதைப் போன்ற சலுகைகள் வழங்குதல்.

(j) இறக்குமதி செய்வதற்கான உரிமை–

(i) இலங்கையில் பதவி ஏற்று அதனைத் தொடர்ந்த முதல் ஆறு மாதங்களில் சுங்கவரி, வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள், தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள், அவர்களது தளபாடங்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தனிப்பட்ட பாவனை மற்றும் உண்பதற்கான ஏனைய பொருட்கள். ஆனால், அவைகளை விற்பனைக்கோ அல்லது வெகுமதியாக கொடுப்பதற்கோ அனுமதி இல்லை. அரசாங்கத்துடன் இணக்கப்பாடு கொண்டு முன் அனுமதி பெற்று அந்த நியதிகளுக்கு உட்படுத்தப்பட்டு அப்படியான விலக்களித்தலின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட எந்த வியாபாரப் பொருளோ அல்லது

சரக்குகளோ வழக்கமாக திரும்பவும் ஏற்றுமதி செய்யப்பட்டு அவை திரும்பவும் இலங்கையில் விற்பனை செய்யப்பட்டால் அந்தப் பொருட்கள் வழமையான சுங்கவரி மற்றும் வரிகளுக்கு உரித்தாகும்.

(ii) அரசாங்கம் மற்றும் UNDP என்பனவற்றிற்கு இடையே ஸ்தாபிக்கப்பட்ட தற்போது நிலவும் சட்டம் மற்றும் உரிய நடவடிக்கைகளுடன் அதற்கு இணையாக இலங்கையில் அவர்களுடைய பதவிகளை முதலில் பெற்றபின் சுங்கவரி, வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் மற்றும் இறக்குமதிகள், தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இன்றி அத்துடன் பாவனை மற்றும் உட்கொள்ள நியாயமான உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஆனால் அவற்றைப் பரிசாக வழங்கவோ அல்லது விற்பனைக்கோ அல்ல.

(iii) நாட்டுப் பிரசைகளாகவுள்ள பணியாளர்கள் அல்லது விருந்தோம்பும் நாட்டின் வதிவிட பிரசைகள் என்போர் பொது உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகள் என்பனவற்றிற்கு உரித்தாகி அவற்றை அனுபவிப்பார்கள்.

உறுப்புரை XI

**மணித்தியாலக் கொடுப்பனவில் உள்நாட்டில் புதிதாக தொழிலுக்கு நியமிக்கப்பட்ட ஆளணி** :

1. அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கு உள்ளூரில் மணித்தியால கொடுப்பனவில் சேவைகளைச் செய்வதற்கு புதிதாக தொழிலுக்குச் சேர்க்கப்பட்ட நபர்கள் தங்களது உத்தியோகபூர்வ பதவியிலிருந்து பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள் மற்றும் தங்களது உத்தியோகபூர்வ பதவியிலிருந்து எடுக்கப்பட்ட எந்த ஒரு நடவடிக்கை தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாது அவர்கள் சிறப்புரிமை பெறுவார்கள்.

2. உள்ளூரில் தொழிலுக்கு மணித்தியால கொடுப்பனவில் நியமிக்கப்பட்ட ஆளணிகளின் தொழிலின் நியதி மற்றும் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் தீர்மானங்கள், சட்ட ஒழுங்குகள் மற்றும் சட்டம் இலங்கைக்கு உரிய சட்டம், சட்ட ஒழுங்குகள் என்பனவற்றிற்கு இணையாகவும் அமையும்.

உறுப்புரை XII

**சிறப்புப் பணி நிபுணர்கள்** :

1. அகதிகளுக்காக ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கு சிறப்புப் பணிகளை நிறைவேற்றும் நிபுணர்களுக்கு அவர்கள் தங்களுடைய தொழில் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சுதந்திரமான, சுயமான பயிற்சிகளுக்கு வசதிகள், சிறப்புரிமைகள் மற்றும் பாதிப்பின்மைகள் முக்கியமாக அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் :

(a) தனிப்பட்ட கைது அல்லது தடுப்புக்காவல் என்பனவற்றிற்கு உட்படாமல் பாதுகாக்கும் சிறப்புரிமை ;

(b) தங்களது பணிகளை நிறைவேற்றும் தறுவாயில் மொழியப்பட்ட வார்த்தைகள் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பானவற்றிற்காக சட்டப்படியான நடவடிக்கைளிலிருந்து பாதுகாப்பான சிறப்புரிமை மற்றும் அவர்கள் அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் பணி நியமனத்திலிருந்து விலகிச் சென்றபின்பும் இந்த சிறப்புரிமைகளை தொடர்ந்தும் பெறும் உரிமை ;

(c) சகல ஆவணங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு வழங்குதல் ;

(d) அவர்களுடைய உத்தியோகபூர்வ தொடர்பாடல்கள், குறியிடல்களைப் பாவிக்கும் உரிமை மற்றும் அஞ்சல் முகவரி அல்லது முத்திரை உறுதிப்படுத்திய பொதிகளில் ஆவணங்கள் மற்றும் கடிதத் தொடர்புகள் என்பனவற்றை பெறும் உரிமை ;

(e) தற்காலிக உத்தியோகபூர்வமான தூதுக்குழு வெளிநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்குவதைப் போன்ற நாணயம் அல்லது பணப்பரிமாற்றக் கட்டுப்பாடுகள் தொடர்பான வசதிகள் ;

(f) *இராஜாங்க தூதுவர்களுக்கு அவர்களது தனிப்பட்ட பொதிகள் தொடர்பான பரிசோதனை மற்றும் கைப்பற்றுதல் என்பனவற்றிற்கு உட்படாமை என்பன அடங்கலான சிறப்புரிமைகள் ஏனையவர்களுக்கு வழங்கப்படுவதுபோல அதே சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.*

உறுப்புரை XIII

***அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் சார்பாக சேவையாற்றும் நபர்கள் :***

1. *பங்காளிகள் இணங்குவதைத் தவிர மற்றும் விருந்தோம்பல் நாட்டினால் நியமிக்கப்பட்ட பிரசைகளைத் தவிர அரசாங்கம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் சார்பாக கடமையாற்றும் சகல நபர்களுக்கும் பொது உடன்படிக்கையின் பிரிவு 18 இன் உறுப்புரை* V *இல் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகள் ஆகியவற்றை வழங்கும் ; அத்துடன் அவை –*

   (a) *அவர்கள் திறம்பட அவர்களது பணிகளில் கடமை புரிய தேவையான அனுமதிச்சீட்டு அல்லது உரிமம் மற்றும் இலவச விசா வழங்கல் மற்றும் உடனடியான உத்தரவாதம் ;*

   (b) *அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் மனிதநேய செயற்திட்டங்களை அமுலாக்கம் செய்ய நாட்டுக்குள் தேவைப்படும் இடப்பரப்பில் சுதந்திரமாக நடமாட்டத்தை அனுமதித்தல்.*

உறுப்புரை XIV

***சிறப்புரிமை இரத்து :***

*சம்பந்தப்பட்ட நபர்களின் தனிப்பட்ட பயனுக்காக அல்லது ஐக்கிய நாடுகள் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆகியவர்களின் நலனுக்காக சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் ஆளணிக்கு வழங்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் எந்த ஒரு நபரின் சிறப்புரிமையை இரத்துச் செய்வார். இது அவரது கருத்துப்படி நீதியின் வழக்கமான நடைமுறைக்கு சிறப்புரிமை தடங்கலாக உள்ளது என்று அவர் கருதினால் ஐக்கிய நாடுகள் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் கரிசனைக்கு தப்பபிப்பிராயம் ஏற்படாதவாறு இதனை இரத்துச் செய்வார்.*

*6-792/1*

---

## *1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டம்*

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள், சமாதானப் படையினரின் நிகழ்வுகள் தொடர்பில், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதியன்று ஐக்கிய அமெரிக்க குடியரசுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்டுள்ள கீழே தொடர்புடைய உறுப்புரைகள் விபரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையின் உறுப்புரைகளின் விளைவாந்தன்மையை ஏற்படுத்தத்தக்க அளவில் பிரயோகிக்கப்படுத்துதல் வேண்டும் என பிரகடனம் செய்கின்றேன்.*

திலக் மாரப்பன (பா. உ.),
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூன் 04.*

**அட்டவணை**

ஐக்கிய அமெரிக்க குடியரசுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும இடையிலான சமாதானப் படையினரின் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் I, II, III, IV, V ஆம் உறுப்புரைகள் :

உறுப்புரை II

1. இலங்கை அரசாங்கமானது, சமாதானப் படையினருடனான உடன்படிக்கையின்கீழ் தொழிற்படும் தன்னார்வத் தொண்டுகளுக்கும் மற்றும் நபர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் சமத்துவமாகச் செயற்படுதல் வேண்டும். மேலும், இலங்கையில் வாழும் ஐக்கிய அரசின் பிரசைகளுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் முழுமையான உதவி மற்றும் பாதுகாப்பு, சிகிச்சை உள்ளடங்கலாக, வழங்கி அவர்களை நடாத்தும் முறையைக் குறைவாக வழங்கி பராமரித்தலாகாது. மேலும் அவர்கள் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் பற்றி தொடர்பிலும் ஐக்கிய அரசின் பிரதிநிதிகளுக்கும் அறிவித்து, கலந்துரையாடி மற்றும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

2. இலங்கை அரசாங்கமானது தன்னார்வத் தொண்டர்களுக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்டவை தொடர்பில் விலக்களிப்புக்களை வழங்க வேண்டும் :

(அ) இலங்கைக்கு வெளியில் இருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளும் வாழ்வாதார செலவுகள், அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகள் மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானங்கள் தொடர்பிலான வரிகள் ;

(ஆ) அவர்களின் சொந்த தேவைக்காக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படும் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான சுங்கத் தீர்வைகள் பிறக்கட்டணங்கள் ; அத்துடன்

(இ) ஏனைய அனைத்து வரிகளும் அல்லது பிற கட்டணங்களும் (குடிவரவு/விசா கட்டணங்கள் உள்ளடங்கலாக) அனுமதிப்பத்திரக் கட்டணம் தவிர,

இராஜதந்திர உறவுகள் தொடர்பிலான வியன்னா உடன்படிக்கையில் உறுப்பினர்களுக்கு போன்று ஐக்கிய அரசின் தூதரங்களில் சேவை புரியும் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் அளிக்கப்படல் வேண்டும்.

3. இலங்கை அரசாங்கமானது இதனையொத்த பணியைச் செய்கின்ற வேறு சர்வதேச அமைப்புக்களின் நிபுணர்கள், சிரேட்ட தன்னார்வத் தொண்டர்கள், உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கின்றவற்றைவிட சாதகம் குறையாத முறையில் வதிவிட அனுமதிப்பத்திரம் மற்றும் விசாக்களை வழங்குதல் வேண்டும். வதிவிட அனுமதிப்பத்திரம் மற்றும் விசாக்களை கட்டணம் அல்லது வேறு கட்டணங்களின்றி வழங்குதல் உள்ளடங்கலாக.

உறுப்புரை III

1. ஐக்கிய அமெரிக்க நாடுகள் அரசானது, வரையறுக்கப்பட்ட அளவிலான கருவிகள் மற்றும் வழங்கல்களுடன் தன்னார்வத் தொண்டர்கள், சமாதானப் படை பிரதிநிதிகள், பிரதிநிதிகளின் பதவியினர்களை வழங்குதல் வேண்டும். அதனூடாக இரு அரசாங்கங்களும் தன்னார்வத் தொண்டர்கள் அவர்களின் பணிகளை வினைபயனுடன் செய்வதற்குத் தேவையானவற்றை கவனத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும்.

2. இலங்கை அரசாங்கமானது வரிகள், சுங்கத் தீர்வைகள், ஐக்கிய அரசால் அல்லது அதனால் நிதியளிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்ததாரரால் இதன் கீழான பாவனைக்கென இலங்கையில் பெறப்பட்ட அல்லது இலங்கைக்குள் அறிமுகப்படுத்தும் ஏனைய கருவிகள் மற்றும் வழங்கல்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

உறுப்புரை IV

1. ஐக்கிய அரசு இவ் உடன்படிக்கையின் மூலமான பொறுப்புக்களை செயற்படுத்துவதற்கு, இலங்கை அரசாங்கமானது சமாதானப் படைப் பிரதிநிதி மற்றும் பிரதிநிதியின் பதவியினர்கள் (சமாதானப் படைப் பிரதிநிதியினால் வேலைக்கமர்த்தப்பட்ட சமாதானப் படையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டு தொழில் புரிகின்ற தொழிலாளர்கள் மற்றும் நபர்கள் உள்ளடங்கலாக) மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் வதிவிடத்திற்கானதொரு பகுதியை

உருவாக்குவதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனைய உடன்படிக்கைகளில் எது எவ்வாறு இருப்பினும், இலங்கை அரசாங்கமானது இலங்கையின் பிரசைகள் அல்லாத அல்லது நிரந்தர வதிவாளர்கள் அல்லாத அத்தகைய நபர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் வதிவிடத்திற்கானதொரு பகுதியை உருவாக்குதலின்போது அல்லது சமாதானப் படை பணிகளின்போது பெறப்படும் வருமானங்கள் அல்லது இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்படும் ஏனைய வளங்கள் தொடர்பில் சகலவிதமான வரிகளில் இருந்தும் விலக்களிக்கப்படுவதுடன், அவர்களின் சொந்த தேவைக்காக இலங்கைக்குள் அறிமுகப்படுத்தும் சொத்துக்கள் தொடர்பிலான சுங்கத் தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களில் இருந்தும் விலக்களிக்கப்பட வேண்டும். (குடிவரவு/tprh கட்டணங்கள் உள்ளடங்கலாக). அனுமதிப்பத்திரக் கட்டணம் தவிர, இதற்கு மேலதிகமாக, அத்தகைய நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வதிவிடத்திற்கானதொரு பகுதியை உருவாக்குதலின்போது, ஐக்கிய அரசின் இராஜதந்திர செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிர்வாக மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் விடுபாட்டுரிமைகளை அனுபவிக்கத் தகாது என்றிருந்தால் தவிர, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதே அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

2. இலங்கை அரசாங்கமானது இவ்வுடன்படிக்கையின் கீழ் செயற்படும் சமாதானப் படைப் பிரதிநிதிகள், பணியாளர்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு வதிவிடத்திற்கானதொரு பகுதியை உருவாக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏனைய செலவுகள் அல்லது கட்டணமின்றி வதிவிட அனுமதிப்பத்திரம் மற்றும் விசாக்களை வழங்குதல் (பல்முறை வருகை விசா உள்ளடலங்காக) வேண்டும்.

உறுப்புரை V

1. இலங்கை அரசாங்கமானது இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் ஐக்கிய அரசினால் அல்லது அதன் ஒப்பந்ததாரர் மூலம் இலங்கையினுள் பாவனைக்காக அறிமுகப்படுத்துகின்ற முதலீடுகள் மற்றும் வைப்புத் தேவைப்பாடுகள் மற்றும் நிதிக் கட்டுப்பாடு போன்றவற்றிலிருந்து விலக்களிக்க வேண்டும். அத்தகைய நிதியானது இலங்கையில் சட்டரீதியற்றதாக இல்லாத வகையில் உயர் விலையில் இலங்கைப் பணமாக நாணயமாற்று செய்யப்படல் வேண்டும்.

*06-792/2*

---

**1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டம்**

4 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இராஜதந்திர சிறப்புரிமைகள், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தி நிதிப் பிரதிநிதிகள், ஊழியர்கள் குடும்பங்கள் அலுவலகம் தொடர்பில், அதாவது கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று கொரிய குடியரசு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கீழே தொடர்புடைய உறுப்புரை 6 இல் விபரிக்கப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான பொருளாதார அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து கடன்கள் தொடர்பான உடன்படிக்கையின் கட்டுறுத்துக்களுக்கு விளைவாந்தன்மையை ஏற்படுத்தத்தக்க அளவில் பிரயோகிக்கப்படுத்துதல் வேண்டும் எனப் பிரகடனம் செய்கின்றேன்.

திலக் மாரப்பன (பா. உ.),
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, யூன் 04.

**அட்டவணை**

கொரிய குடியரசு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையிலான பொருளாதார அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து கடன்கள் பெற்றுக்கொள்வது தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை :

2. இலங்கை அரசாங்கம், பிரதிநிதிகள்/பணியாளர்கள்/அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் அதேபோன்று அலுவலகத்திற்கும் பின்வரும் சலுகைகள் விலக்களித்தல் மற்றும் பிற நன்மைகளை வழங்கும் :

(a) பிரதிநிதிகள் பணியாளர் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு,

(i) வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு அனுப்பப்படும் கொடுப்பனவுகள் அல்லது ஊதியங்கள் தொடர்பாக அவர்களுக்கு சுமத்தப்படும் குடிமக்கள் வருவாய்க் கட்டணங்கள் மற்றும் வருமான வரி என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்படும்.

(ii) கொன்சுயுலர் கட்டணங்கள், சுங்க வரி மற்றும் அதே தன்மை வாய்ந்த ஏனைய கட்டணங்கள் மற்றும் சேகரிப்பு, பொருட்களை இழுத்துச்செல்லும் வண்டி மற்றும் ஒரே மாதிரியான சேவைகள் , தனிப்பட்ட மற்றும் வீட்டுச் சாமான்கள் தொடர்பான இறக்குமதி அதாவது ஒவ்வொரு பிரதிநிதி மற்றும் பணி புரியும் அலுவலக அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாகனம் வாகனப் பதிவுக் கட்டணம், வருடாந்த வருமான உரிமக் கட்டணம் மற்றும் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன அடங்கலாக. ஆனால் அப்படியான இறக்குமதிகள் பிரதிநிதிகள் மற்றும் பணிபுரியும் அங்கத்தவர்கள் நாட்டுக்கு வருகை தந்த 6 மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) சுங்கத் தீர்வை அல்லது வரி இல்லாமல் மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்ய உரிமை உள்ள பணிபுரியும் அங்கத்தவர்களது தனிப்பட்ட பாவனைகளுக்காக இலங்கையில் தொழிலுக்கு நியமிக்கப்பட்ட இலங்கையர்களைத் தவிர பிரதிநிதிகள் மற்றும் ஒவ்வொரு வெளிநாட்டு நிபுணத்துவ பணிபுரியும் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மோட்டார் வாகனம் என்ற அடிப்படையில் விசேட பயன்பாட்டு வரி மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றில் விலக்களிப்பு.

(iv) உள்நாட்டு கொள்வனவு தொடர்பில் உள்ளூரில் தொழில் புரியும் இலங்கையர்களைத் தவிர்ந்த பிரதிநிதிகள் மற்றும் பணிபுரியும் அங்கத்தவர்கள் வரிகள் எதுவுமின்றி ஏற்கனவே வரி இல்லாது இறக்குமதி செய்துள்ள வாகனங்களை இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம் மூலம் பெறலாம். தற்காலிகமாக தொழிலில் நியமிக்கப்பட்ட பணிபுரியும் அங்கத்தவர்கள் தீர்வை அற்ற வாகனங்கசளை இறக்குமதி செய்வதற்கு அல்லது வாங்குவதற்கு உரிமை இல்லை.

(v) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் அவர்களுடைய தொழில் நியமன காலப்பகுதியில் வருவதற்கும் புறப்பட்டுச் செல்வதற்கும் அத்துடன் சிலகாலம் தங்கியிருப்பதற்கும் அனுமதி மற்றும் அயல் நாட்டினர் பதிவுகளுக்கான நடைமுறைகள் என்பனவற்றை துரிதப்படுத்துதல் மற்றும் வசதிப்படுத்துதல் மற்றும் கொன்சுயுலர் கட்டணத்தை விலக்களித்தல்.

(vi) பிரதிநிதிகள் பணிபுரியும் அங்கத்தவர்கள் அவர்களது குடும்பங்களுக்கு நாட்டினுள் நுழைய ஒரு மாத நுழைவு விசா இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படுதல் மற்றும் அவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உட்புகுந்தவுடன் பல்வேறுபட்ட நுழைவு வதிவிட விசா (பல முறை வருகை விசா) அவர்களது பணிபுரியும் காலம் நீடிக்கும்வரை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குடியகழ்வு, குடிபுகுதல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் நிலவும் குடிபுகுதல் சட்டங்கள் என்பனவற்றிற்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிவிவகார அமைச்சின் பரிந்துரைகளுடன் வழங்கல்.

(vii) பிரதிநிதிகள் மற்றும் பணிபுரியும் அங்கத்தவர்களது வருகை பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்தல் இராஜதந்திர அடையாள அட்டைகளை பிரதிநிதிகளுக்கு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் அடையாள அட்டையை ஏனைய அங்கத்தவர்களுக்கு பிரதிநிதிகள் மற்றும் பணிபுரியும் அங்கத்தவர்களது பணிகளை நிறைவேற்றத் தேவைப்படும் ஒத்துழைப்பை எல்லா அரச முகவர்களிடம் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்படுகின்றன.

(viii) கடவுச்சீட்டு வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு இடத்திற்கு அப்பால் நிபுணர்கள் மற்றும் வங்கித் தூதுக்குழுக்களை வழியனுப்பி வைக்க விமான நிலையம், கப்பல் துறைமுகம் என்பனவற்றில் உள்நுழைய விசேட அனுமதிச்சீட்டுக்கள் வழங்குதல் நுழைவுரிமை நிரந்தர அனுமதிச்சீட்டு பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும். வேண்டுகோள், தேவை என்பனவற்றின் அடிப்படையில் கப்பல் துறைமுகத்தை அடைய நுழைவுரிமை வசதிகள் வழங்கப்படுகின்றன.

(b) அலுவலகத்திற்கு மட்டும் :

(1) சேகரித்து வைக்க மற்றும் பொருட்களைச் சுமந்து செல்லும் பார வண்டிகள் மற்றும் அதுபோன்ற சேவைகள் தவிர சுங்க வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்களுக்கு விலக்களித்தல் அதுபோல் அலுவலக உபகரணங்களின் இறக்குமதி தொடர்பான இறக்குமதி உரிமம் வெளிநாட்டு நாணய மாற்றுச் சான்றிதழ்.

(2) இரண்டு அரசாங்கங்களின் சம்பந்தப்பட்ட அதிகார குழுக்கள் இடையே மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது என்ற நிபந்தனைப்படி அலுவலக செயற்பாட்டின் நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் மோட்டார் வாகனங்களின் பெறுமதிசேர் வரி (வெட்) மற்றும் உள்ளூரில் கொள்வனவு செய்ய தடையற்ற விசேட நுகர்வோர் வரி இறக்குமதி சுங்க வரிகள் இல்லாதவை.

(3) வெளியூர்களிலிருந்து அலுவலக செலவுகளுக்காக அனுப்பப்படும் நிதிகள் தொடர்பான அல்லது ஏனைய சுமத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் உள்நாட்டு வரி என்பனவற்றின் விலக்களித்தல்.

(4) அலுவலக வாடகைக்குச் சுமத்தப்படும் பெறுமதிசேர் வரி என்பனவற்றிலிருந்து விலக்களித்தல்.

(5) அலுவலக வாடகைக்குச் சுமத்தப்படும் பெறுமதிசேர் வரி என்பனவற்றிலிருந்து விலக்களித்தல்.

(6) அலுவலகம் மற்றும் பணிபுரியும் அங்கத்தவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பணிகளின் செயலாற்றலுக்கு தேவைப்படும் ஏனைய நடவடிக்கைகள்.

3. மேலே பந்தி 2 இல் கூறப்பட்ட மோட்டார் வாகனங்கள் அதன் பின்பு விற்கப்பட்டாலோ அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் தனி நபர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உடமை மாற்றம் செய்யப்பட்டால் அவை சுங்க வரிகள் மற்றும் வரிகள் அல்லது அதே மாதிரியான சலுகைகளைப் பெறக்கூடிய விலக்களித்தலுக்கு உரிமை உடையவர்களாக மாட்டார்கள். மற்றும் மேலே கூறப்பட்ட வரிகளைச் செலுத்துவதற்கு உட்படுத்தப்படுவார்கள்.

4. மேலே 2 ஆம் பந்தியின் (ii) மற்றும் (1) (b) மற்றும் (ii) (a) உப பந்திகள் என்பதற்கு அமைவாக சுங்க வரி மற்றும் அதேபோன்ற ஏனைய வரிகளுக்கு விலக்களிக்கப்பட்டு பொருட்களை இறக்குமதி செய்யும் பிரதிநிதிகள் பணிபுரியும் அங்கத்தவர்கள் அவர்களுடைய குடும்பங்கள் அத்துடன் அவர்களது அலுவலகம் இறக்குமதி திரும்ப ஏற்றுமதி செய்யும் விதிமுறைகள் என்பனவற்றிற்கு உதவ இலங்கை அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அப்பொருட்களின் விபரங்களை வழங்க வேண்டும்.

5. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டம் மற்றும் சட்ட ஒழுங்குகள்படி சுங்க வரிகள் மற்றும் அதேபோன்ற ஏனைய கட்டணங்கள் இவ்வாறு இறக்குமதி செய்ய பொருட்களுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கிய பின் பிரதிநிதிகள் பணிபுரியும் அங்கத்தவர்கள் அவர்களுடைய குடும்பங்கள் அத்துடன் அலுவலகம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் திரும்பவும் ஏற்றுமதி மற்றும் விற்பனை செய்வார்கள்.

6. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஒரு சிறப்பான பணியைச் செயலாற்றும் எந்த ஒரு சர்வதேச அமைப்பு அல்லது ஏதாவது ஒரு மூன்றாவது நாட்டின் நிறைவேற்று முகவர்கள், பிரதிநிதிகள், பணிபுரியும் அங்கத்தவர்கள் அத்துடன் அலுவலகங்கள் என்பனவற்றிற்கு வழங்கும் சலுகைகளுக்கு குறையாமல் இலங்கை அரசாங்கம் பிரதிநிதிகள், பணிபுரியும் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு அதேபோல அலுவலகங்களுக்கு இவ்வாறான சலுகைகளை வழங்குகின்றது. இந்தச் சலுகைகள் இலங்கைப் பிரசைகளுக்கு உரித்தாகாது.

06-792/3

## *1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டம்*

*4 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஜெர்மன் கைத்தொழில் வர்த்தக தூதுக்குழு தொடர்பில் அதாவது கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6 ஆந் திகதியன்று பெடரல் ஜெர்மன் குடியரசுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கீழே தொடர்புடைய உறுப்புரையில் விபரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையின் கட்டுறுத்துக்களுக்கு விளைவாந்தன்மையை ஏற்படுத்தத்தக்க அளவில் பிரயோகிக்கப்படுத்துதல் வேண்டும் என பிரகடனம் செய்கின்றேன்.*

திலக் மாரப்பன (பா. உ.),
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூன் 04.*

### *அட்டவணை*

*பெடரல் ஜெர்மன் குடியரசுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையில் இலங்கையில் ஜெர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக குழுவை தாபிப்பது தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை :*

2. *தூதுக்குழுவின் நோக்கம், வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை ஜெர்மன் பெடரல் குடியரசின் கம்பனிகள், நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்கள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என்பனவற்றிற்கு இடையே விருத்தி செய்வதாகும். அது இரு நாடுகளின் வியாபாரத்தில் நாட்டம் உள்ளவர்களுக்கு செல்வாக்கைச் செலுத்தி வர்த்தக செயற்பாட்டினை இரு திசைகளிலும் மேம்படச் செய்கின்றது. தூதுக்குழு இலாப நோக்கத்தில் குறியாக உள்ளவர்களை பின்பற்றாது. அதனுடைய செலவுகளை நிவர்த்தி செய்ய அதனுடைய சேவைகளுக்கு கட்டணங்களை அறவிடுவதற்கு உரிமை உள்ளது.*

3. *தூதுக்குழு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் கைத்தொழில் வர்த்தக ஜெர்மன் சங்கத்தின் குழுவின் பிரதிநிதித்துவப்படுத்துபவராக தன்னைப் பதிவுசெய்து கொள்கின்றது. தூதுக்குழு கொழும்பை இருப்பிடமாகக் கொண்டிருக்கும். இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட நிலப்பரப்பில் இலங்கைக்கு உரித்தான சட்டப்படி ஏனைய கிளை அலுவலகங்களை ஸ்தாபித்து பேணி வருகின்றது. தூதுக்குழு மேலே 2 ஆம் பந்தியில் குறியீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்கான தீர்மான ஏற்பாடுகளில் இணக்கம் காணும் சாத்தியம் உள்ளது.*

4. *தூதுக்குழு பெடரல் ஜெர்மன் குடியரசு அல்லது வின் பொருளாதார அலுவல்கள் மற்றும் எரிபொருள் சக்திக்கான பெடரல் அமைச்சிலிருந்து பெறப்படும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகையினால் தூதுக்குழுவுக்கு பணம் வழங்கப்படுகின்றது. செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்திற்காக பெடரல் ஜெர்மன் மற்றும் டிஐஎச்கே என்பனவற்றை நேரடியாகவோ அல்லது நேரடியற்ற முறையில் செலுத்தும் பணங்களுக்கு நேரடியான வரிகளுக்கு விலக்களிப்புகள் வழங்கப்பட வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மற்றும் ஜெர்மன் பெடரல் குடியரசில் வங்கிக் கணக்குகள் வைத்திருக்க வர்த்தகக் குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் எந்தவொரு வெளிநாட்டு நாணயம் தூதுக்குழுவுக்கு பெறப்பட்டால் அவை எந்த வேளையிலும் ஜெர்மன் பெடரல் குடியரசு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுகளுக்கிடையே எந்த ஒரு கட்டுப்பாடுகள் இல்லாது சுதந்திரமாக எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாது எந்நேரத்திலும் நாணய மாற்று செய்யலாம்.*

5. *மேலே 2 ஆம் பந்தியில் குறியீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக DIHK சார்பாகவோ அல்லது ஒருங்கிணைந்த தூதுக்குழுவுக்காகவோ பணிபுரியும் நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் (மனைவி மற்றும் அவர்களுடைய பராயமடையாத பயிற்சி பெறும் பிள்ளைகள்) ஆகியோர் இராஜதந்திர தூதுக்குழுவின் அங்கத்தவர்களாகவோ அல்லது இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசில் உள்ள பெடரல் ஜெர்மன் குடியரசின் அங்கத்தவர்களாகவோ கருதப்பட மாட்டார்கள். தூதரகங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், சிறப்புரிமைகள் என்பனவற்றை அவர்கள் அனுபவிக்க முடியாது.*

6. ஏற்புடைய சட்டங்கள் மற்றும் சட்டம் இயற்றுதல் போன்றவை அமைந்துள்ள தருணத்திற்குள் மேலே உள்ள 5 ஆம் பந்தியில் குறியீடு செய்யப்பட்ட நபர்களுக்கு வதிவிட அனுமதிப்பத்திரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ள அதிகாரிகள் துரிதமாக வழங்குவார்கள். வதிவிட அனுமதிப்பதிரம் வைத்திருப்பவர் பலமுறை வருகை விசா மற்றும் புறப்பாடு என்பனவற்றிற்கு அனுமதிப்பத்திரம் சட்டப்படி செல்லக்கூடிய காலம் வரைக்கும் உரித்துடையவராவார். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய சட்டத்திற்கு அமைவாக அனுமதிப்பத்திரங்கள் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படும். பதவியை பொறுப்பேற்றுக்கொள்வதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு வருவதற்கு முன்கூட்டியே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் அமைந்துள்ள இராஜதந்திர தூதரகங்கள் அல்லது துணைத் தூதரகங்களில் வீசா போன்ற முறையில் ஒரு வதிவிட அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் அனுமதிப்பத்திரத்தின் கால எல்லையை நீடிக்க விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

7. மேலே 5 ஆம் பந்தியில் குறியீடு செய்யப்பட்ட நபர்களுக்கு தூதுக்குழுவில் தமது பணிகளை தூதுக்குழுவில் செயலாற்ற தொழில் அனுமதிப்பத்திரம் தேவைப்படாது.

8. தூதுக்குழுவில் தொழிலுக்கு நியமிக்கப்பட்ட எண்ணிக்கை ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்திற்கு நியாயமான விகிதாசார அமைவில் அமைய வேண்டும்.

9. மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நபர்களது சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய உழைப்புகள் என்பன பெடரல் ஜெர்மன் குடியரசு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என்பனவற்றிற்கு இடையே ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைப்படி வரிகளுக்கு உட்படுத்தப்படும். இது சட்டம் மற்றும் சட்டம் இயற்றுதல் என்பன போன்ற ஏற்புடையவற்றுடன் தொடர்புடைய மற்றும் வருமானம், மூலதனம் என்பன தொடர்பான வரிகள் என்பனவற்றுடனான இரட்டை வரி என்பனவற்றை தவிர்ப்பதற்காகும்.

10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் நிலவும் சட்டங்கள், ஆட்சி மற்றும் சட்ட ஒழுங்கமைப்புகள் என்பனவற்றிற்கு அமைவாக மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் அவர்களால் கொண்டுவரப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் திரும்ப அவர்களது தனிப்பட்ட சொத்துக்களை ஏற்றுமதி செய்தல் என்பனவற்றிற்கு அறவிடும் சுங்கத் தீர்வைகள் மற்றும் ஏனைய அறவிடப்பட்ட கட்டணங்களிலிருந்து விலக்களிப்பை அவர்கள் 12 மாதத்திற்குள் அவர்கள் செல்லும்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வழங்கும்.

06-792/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.